

# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2016 ~ செப்டெம்பர் ~ ஒக்டோபர் ~ நவம்பர் வெளியீடு

மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல,
தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.
சங்கீதம் 42:1

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்-கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுவுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# தேவனின் சத்தமும், உலகத்தின் ஒளியும்

**இயேசு ஜனங்களை நோக்கி: 'நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்' என்றார். யோவான் 8:12**

தேவனின் சத்தத்தைக் கேட்டவுடன் சவுல் பவுலாக மாறினான். (அப் 9:3) அவன் நிச்சயமாய் ஆண்டவரின் தெய்வீக ஒளியை தரிசித்தானேயல்லாமல் சூரிய ஒளியைக்காணவில்லை. திடீரென்று அவனைச் சூழ அந்த ஒளி மிகவும் அதிகமாகப் பிரகாசித்தது. அந்த ஒளியைக் கண்டவுடன் அவன் கீழே விழுந்தான். சவுல் கண்டது போன்ற ஒளியைக் ஒரு வேளை நீ காணாதிருக்கலாம். ஆனால், அதே ஒளி நம்முடைய ஊனக்கண்களுக்குத் தெரியாமல் நம் எல்லோருக்குள்ளும் வந்து கிரியை செய்ய வல்லமையுள்ளதாயிருக்கிறது.

உலகத்தின் ஒளியான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே அந்த மெய்யான ஒளியாக நமக்குள்ளே பிரவேசித்து நம்முடைய உண்மையான நிலைமையை நமக்கு எடுத்துக் காண்பிக்கிறார். பல ஆண்டு காலம் நமக்குள்ளே மறைந்திருந்த பாவங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறார். இவ்வாறே எனது வாழ்க்கையிலும் சம்பவித்தது. என் மாம்ச கண்களால் அந்த ஒளியை நான் காணவில்லை. ஆனால், "மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நான் உனக்குச் சொல்லுகிறேன்" அப்படியானால் நான் ஒரு பாவிதான். கர்த்தாவே! என்று பதிலுரைத்தேன். நான் உமக்கு விரோதமாக எவ்வளவு நிந்தனையான தேவ தூஷணங்களைக் கூறியிருக்கிறேன். 1919 ல் பரிசுத்த வேதாகமத்தைக் கிழித்தெறிந்தவன் அல்லவா! அவ்வேளையில் தானே கர்த்தரை நோக்கி கெஞ்ச ஆரம்பித்ததும் பல ஆண்டுகளாக நான் முற்றிலும் மறந்திருந்த பல பாவங்கள் என் கண்கள் முன்பாக கொண்டு வரப்பட்டன.

பவுல் அப்போஸ்தலன் குணப்பட்ட வேளையில் இவ்விதமாகவே அவனுக்கும் சம்பவித்தது. கர்த்தரை சந்திக்கும் வரை சவுல் தனது அறிவாற்றலால் தேவனுக்கு தொண்டுசெய்ய முயற்சித்து வந்தான். ஆனால் அவனுடைய உண்மையான உள்ளத்தின் நிலைமை அவனுக்குத் தெரியாமல் இருந்தது. இப்பொழுதோ தெய்வீக ஒளியானது அவனுக்குள் பிரவேசித்தவுடன் "என் மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறேன் நன்மைசெய்ய வேண்டும் என்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை." (ரோமர் 7:18) என்று அறிக்கையிடுகிறான். அப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லாமல் சொல்லுவது "உன்னையும் அறியாமலேயே நீ என் வேலைக்கு எவ்வளவு நஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறாய்?" என்று வெளிப்படுத்தினார். தேவனுடைய ஒளிதான் நம்முடைய உள்ளான நிலைமையை எடுத்துக் காண்பித்தவுடன் நாம் நன்மை செய்வதாக எண்ணிக்கொண்டே எவ்வளவு தீமை செய்கிறோம், தேவனுக்கு நஷ்டம் விளைவிக்கிறோம் என்று எடுத்துக் காண்பிக்கிறது.

அனுதின தேவ இரகசியத்திலிருந்து
சகோ. பக்த் சிங்




நாம் வாசித்த வேத பகுதியிலே விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரியை வேதபாரகரும், பரிசேயரும் இயேசுவினிடத்தில் கொண்டு வந்து அவளை நடுவே நிறுத்தி "போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள்.

இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள்.

உண்மையில் இயேசுவின் மேல் குற்றஞ் சுமத்த வேண்டுமென்பதே அவர்களுடைய பிரதான நோக்கமாய் இருந்தது. எப்படியெனில், அவளை மன்னித்து விட்டுவிடுங்கள் என்று சொன்னால் இவர் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாக செயற்படுகிறார் என குற்றஞ்சுமத்தலாம் அல்லது நியாயப்பிரமாணத்தின் படியே கல்லெறிந்து கொல்லுங்கள் என்று சொன்னால் இவர் இரக்கம் இல்லாதவரென்றும் இவருடைய போதனைக்கும், அவர் செயல்படும் முறைமைக்கும் முரண்பாடு உள்ளதென்றும், இவர் ரோமப்பேரரசிற்கு எதிரிடையாக செயற்படுபவரென்றும் குற்றஞ் சுமத்தலாம். ஏனெனில், அங்கு அந்நாட்களில் மரண தண்டனை அளிக்கும் உரிமையானது ரோமப்பேரரசிற்கு மட்டுமே உரித்தாயிருந்தது. இவ்விதமாக ஆண்டவர் என்ன பதில் சொன்னாலும் அதை வைத்து குற்றஞ்சுமத்தும் கொள்கையிலேயே காணப்பட்டார்கள்.

ஆனால் இயேசுவோ அவர்களின் கேள்விகள் ஒவ்வொன்றுக்காய் பதில் கூறாமல் குனிந்து விரலினால் தரையிலே எழுதிக்கொண்டிருந்தார். இவரை ஓயாமல் கேட்டு தொந்தரவு செய்த படியால் அவர் அவர்களை நிமிர்ந்து பார்த்து "உங்களில் பாவம் இல்லாதவன் இவள் மேல் முதலாவது கல் எறியக்கடவன்" என்று மட்டும் கூறிவிட்டு அவர் மறுபடியும் குனிந்து தரையிலே எழுதினார். ஆண்டவர் என்ன எழுதினார் என்று தெரியவில்லை. ஆதலால், ஆண்டவரின் இச்செயல்பாடு பழைய ஏற்பாடு எரேமியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை நினைவுபடுத்துகிறது:

"இஸ்ரவேலின் நம்பிக்கையாகிய கர்த்தாவே, உம்மைவிட்டு விலகுகிற யாவரும் வெட்கப்படுவார்கள், அவர்கள் ஜீவனுள்ள தண்ணீரின் ஊற்றாகிய கர்த்தரை விட்டு விலகிப்போனபடியால்,

உம்மைவிட்டு அகன்று போகிறவர்களின் பெயர் புழுதியில் எழுதப்படும்". ஆதலால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம், இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களின் பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுவானவரின் பதிலைக் கேட்டு அவர்கள் தங்கள் மனசாட்சியில் கடிந்து கொள்ளப்பட்டவர்களாய் பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார். அந்த ஸ்திரியும் நின்று கொண்டிருந்தாள். இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரியைத் தவிர வேறொருவரையும் காணாமல் ஸ்திரியே உன் மேல் குற்றஞ் சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா? என்றார். அதற்கு அவள் இல்லை ஆண்டவரே! என்றாள். இயேசு அவளை நோக்கி "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ, இனி பாவஞ் செய்யாதே" என்றார்.

அன்பார்ந்தவர்களே! இந்த வேதபகுதியிலிருந்து பின்வரும் படிப்பினைகளை நாம் கற்றுக்கொள்ளக்கூடியதாயுள்ளது.

1) நாம் யாரையேனும் குற்றஞ் சாட்டுவதற்கு முன்பதாக நம்மை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். உங்களில் பாவம் இல்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று இயேசுவானவர் சொன்னது அதைத்தான் நமக்கும் அறிவுறுத்துகிறது. "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறது என்ன?

இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?

மாயக்காரனே! முன்பு உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன் கண்ணில் இருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்" என இயேசு தமது மலைப்பொழிவில் உரைத்தது நினைவில் இருக்கட்டும். (மத்தேயு 7:3-5)

2) அடுத்தபடியாக எந்தவொரு விடயத்தைக் குறித்தாவது தீர்ப்பை வழங்கும் சந்தர்ப்பங்கள் வரும்போது, பக்கசார்பு அற்ற நடுநிலையாக செயல்பட வேண்டும். இங்கே வேதபாரகரும், பரிசேயரும் கையும் மெய்யுமாக பிடித்தோம் என்று அந்த ஸ்திரியை மட்டுமே கொண்டு வந்தார்கள். ஆனால் அவளுடன் விபசாரத்தில் ஈடுபட்டவனை தப்பிக்க விட்டுவிட்டார்கள். இன்று உலக வழக்கின்படியும் எப்பக்கம் பெரும்பான்மை உள்ளதோ? எங்கே பெலம் இருக்கிறதோ? எங்கே பணம் இருக்கிறதோ? எங்கே செல்வாக்கு இருக்கிறதோ? அவர்களுக்கு சார்பாகவே தீர்ப்புகள் அமைந்துவிடுகின்றன. ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் பக்கசார்பாக செயல்படக்கூடாது. நியாயத்திலே முகதாட்சிணியம் நல்லதல்ல (நீதி 24:23)

3) மன்னிக்கப்பட்ட பாவத்தை திரும்பவும், திரும்பவும் செய்வதை தேவன் விரும்புவதில்லை. நீ போ இனி பாவஞ் செய்யாதே என்று ஆண்டவர் அந்த ஸ்திரிக்கு சொல்லி அனுப்பினார். முப்பத்தெட்டு வருடங்களாக வியாதி கொண்டிருந்து பெதஸ்தா எனப்பட்ட குளத்தண்டையிலே படுத்திருந்த மனுஷனுக்கு அற்புத சுகத்தை கொடுத்த ஆண்டவர் மறுபடியும் ஆண்டவர் அவனை தேவாலயத்தில் காணும்போது: "இதோ! நீ சொஸ்தமானாய். அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார். ஆம்! பாவங்கள் மன்னிக்கப்-

பட்ட பின்பு அதை மீண்டும் செய்வது ஆண்டவருக்கு பிரியமானதல்ல.

இன்று அநேக விசுவாசிகளுடைய வாழ்வில் பாவமானது சக்கரம் போன்று சுழன்று கொண்டிருக்கிறது. எப்படி எனில், பாவம் செய்தல், மனஸ்தாபப்படல், அறிக்கையிடுதல், மன்னிப்பு பெறல், மறுபடியும் பாவஞ்செய்தல், மனஸ்தாபப்படல் என இத்தொடர்ச்சியான பாவ வாழ்வு பல விசுவாசிகளை தொடர்ந்து பிடித்துக்கொண்டிருக்கிறது. இந்நிலைமையிலிருந்து முற்றிலும் திரும்பவே வேண்டும். “தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதி 28:13) தேவனால் பிறந்த எவனும் தொடந்தும் பாவம் செய்யமாட்டான் என்பதே வேத போதனையாகும். (1 யோவான் 3: 9, 5 18) ஆம்! ஆண்டவர் சொன்னார் “இனி பாவஞ் செய்யாதே” சிந்திப்போம்! செயற்படுவோம்.

தன் பாவங்களை
மறைக்கிறவன்
வாழ்வடையமாட்டான்
அவைகளை
அறிக்கை செய்து
விட்டு விடுகிறவனோ
இரக்கம் பெறுவான்.
(நீதி 28:13)

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

## லேவியராகமம்

| | |
|---|---|
| எழுதியவர் | : மோசே |
| காலம் | : கி.மு. 1445 - 1444 |
| அதிகாரங்கள் | : 27 |
| வசனங்கள் | : 859 |
| பின்னணி | : சீனாய் மலையின் அடிவாரம் |
| முக்கிய சொல் | : பரிசுத்தம் |

புதிதாய் மீட்கப்பட்ட தேவ ஜனத்துக்கு ஆராதனை, ஊழியம் மற்றும் கீழ்படிவு பற்றிய வழிகாட்டி

**பலிகள் :**

- தகன பலி - 1:3
- போஜன பலி - 2:1
- சமாதான பலி - 3:1
- பாவநிவாரண பலி - 4:3
- குற்ற நிவாரண பலி - 5:15

**பண்டிகைகள் :**

- பஸ்கா - 23:4
- புளிப்பில்லா அப்பப்பண்டிகை - 23:6
- முதற்பலன் - 23:10
- பெந்தெகொஸ்தே - 23:16
- எக்காள பண்டிகை - 23:24
- பாவநிவிர்த்தி நாள் - 23:27
- கூடாரப்பண்டிகை - 23:34

# மாறப்பண்ணினீர்

"என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர்" சங்கீதம் 30: 11

நான் ஆண்டவரை என் தெய்வமாக ஏற்றுக்கொள்வதற்கு முன்பதாக நான் வேறு மத வழிபாடுகளில் ஈடுபாடு உள்ளவளாய் இருந்தேன். தேவனைக் குறித்து அறியாமலும், அவரைக் குறித்து யாரும் எனக்கு அறிவியாமலும் வாழ்ந்தேன். எனக்கு இரு சகோதரிகள் இருந்தார்கள். அவர்களில் எனது மூத்த சகோதரி யுத்தத்திற்கு முன்பே வவுனியாவுக்கு சென்று விட்டார். எனது சகோதரியின் பிள்ளைக்கு கால் இயலாது, வளைவாக காணப்பட்டது, எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பலன் இல்லாமலும் போய்விட்டது. இக்காலகட்டங்களில் தேவனுடைய ஊழியக்காரர்கள் அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்த வேளையில் 16/ 03/ 2000 அவர்கள் தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். சுகவீனமான தங்கள் பிள்ளைக்காக மன்றாடவும் விண்ணப்பம் பண்ணவும் தொடங்கினார்கள். தேவன் அற்புதமாக அப்பிள்ளைக்கு சுகத்தை அருளினார்.

யுத்தங்கள் காரணமாக நாங்கள் பலவிதமான இன்னல்களை அனுபவித்தோம். அக்காலங்களில் எனது மூத்த சகோதரி எங்களுக்கு தேவனைக்குறித்து எவ்வளவோ அறிவித்தும் நாங்கள் அதை நம்பவில்லை. யுத்தத்தின் இறுதியில் முகாமிலிருந்து விடுதலையாகி எனது மூத்த சகோதரியின் வீட்டிற்கு போய் இருக்கும் வேளையில் தேவ ஊழியர் ஒவ்வொரு ஞாயிறு ஆராதனைக்கும் பிறகு தொடர்ந்தும் வந்து ஆண்டவரைக் குறித்து கற்றுக்கொடுக்கும் வேளையில் நான் படிப்படியாக மனம் திரும்பினேன். ஆனால், எனது குடும்பத்தினர் மனந்திரும்பவில்லை.

சிறிது காலத்திற்கு பின்பு எனது அம்மா கடும் நோயிற்குள்ளாகி வைத்திய சாலைக்கு செல்லவும் மறுத்துவிட்டார். நான் எனது அம்மாவிற்காக கண்ணீரோடு ஜெபம் பண்ணினேன். மருந்தேதும் இன்றி அற்புதமாக தேவன் சுகம் அருளினார். அவ்வேளையில் அம்மாவும், அப்பாவும் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள். தேவன் என்னை தெரிந்தெடுத்துள்ளார் என்பதை நான் நிச்சயப்படுத்திக்கொண்டேன்.

15 /05 /2011 அன்று நான் முழுமையாக இரட்சிக்கப்பட்டேன். ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போதும் தேவன் என்னோடு இடைப்பட்டார்.

"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" எரேமியா 33:3

தேவன் என்னை நல்வழியிலே நடத்துகிறார். எனது எதிர்கால துணையாக ஒரு ஊழியக்காரன் தேவையென்று தேவனிடம் விண்ணப்பம் பண்ணினேன். தேவன் எனக்கு ஒரு அருமையான கணவனை அருளினார். தேவனுடைய எல்லாவிதமான கிருபைகளுக்காய் நன்றி செலுத்துகிறேன். அல்லேலூயா!

- Sis. Santhirakumari Muraganathan -

# எலும்பில் எலும்பு

- Sis. Benventhoor Viji -

இது என்ன எலும்பு? யாருடைய எலும்பு என கேள்வி எழும்புகிறதா? இதற்கு வேதாகமம் எமக்கு பதில் தருகிறது. ஆதி 2:21

ஆதியில் தேவன் முதல் மனிதனாகிய ஆதாமைப் படைத்தார். தேவன் படைத்த எல்லாவற்றிற்கும் ஆதாம் பெயரிட்டான். அவனுக்கோ ஏற்ற துணை காணப்படவில்லை. ஆகையால் தேவன் ஆதாமிற்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி அவனுடைய விலா எலும்பில் ஒன்றை எடுத்து அதை பெண்ணாக உருவாக்கி ஆதாமிடம் ஒப்படைத்தார் (ஆதி.2:22-23). அப்பெண்ணிற்கு ஆதாம் ஏவாள் எனப்பெயர் வைத்தான். ஆதாமின் எலும்பில் எடுக்கப்பட்ட எலும்பே ஏவாள்.

இன்று தனது வாழ்விற்கு துணையாக தேவன் கொடுத்த மனைவியாகிய துணையை கணவன் எப்படி அன்பு கூறுகிறான்? எபே 5:25ல் சொல்லப்பட்ட வார்த்தையின் படி இயேசு சபையை எவ்வாறு அன்பு கூர்ந்தாரோ அப்படி அன்பு கூற வேண்டும். இன்று யார் இந்த அன்பை காண்பிக்கிறார்கள் (சிந்திப்போம்). நாம் வாழும் சமுதாயத்தில் ஏன் கிறிஸ்தவ மனைவிகள் கூட அநேகர் தம் கணவரின் அன்பின்மையையும் பொறுப்பின்மையையும் கூறி வேதனைப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது? மனைவி ஒரு வார்த்தை பேசக்கூட அனுமதியில்லை. நானே குடும்பத்தலைவன் எனக்கு எல்லாம் தெரியும் என்று திட்டுவதும் சிலர் மனைவியை அடிப்பதும் கூட காணப்படுகிறது. ஆகவே கணவன்மாரே உங்கள் சரீரங்களைப் போல நீங்கள் உங்கள் மனைவியை எண்ண வேண்டும் என வேதம் கூறும் வார்த்தைக்கு கீழ்ப்படியுங்கள். (எபே 5:28) புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்பு கூரவேண்டும். தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில் தான் அன்புகூருகிறான்.



உங்கள் மனைவியைக் கடிந்துக்கொள்ளாதிருங்கள். (நீதி 31:10-31) சொல்லப்பட்டது போல உங்கள் மனைவி இருந்தால் ஆண்டவருக்கு நன்றி கூறுங்கள். தொடர்ந்தும் உங்கள் மனைவியை நேசியுங்கள்.

கணவன் மிகுந்த அன்பு கூறுவதைக்கண்டு மனைவி கணவனை அசட்டைப் பண்ணாமல் வேத வார்த்தையின்படி எபே 5:25ல் கூறப்பட்டப்படி மனைவிகள் தங்கள் சொந்கப் புருஷருக்கு எந்த காரியத்திலும் கீழ்ப்படிய வேண்டும். 1பேது 3:2 ல் கூறப்பட்ட படி தங்கள் கற்புள்ள நடத்தையினாலே இரட்சிக்கப்படாத தங்கள் கணவரைக்கூட ஆதாயம் பண்ண முடியும். ஆகவே மனைவிகள் புருஷருக்கு கீழ்ப்படிந்து வாழும் போதும் கணவன்மார் மனைவிகளை அன்பு செய்து வாழும் போதும் இந்த முன்மாதிரியான நல்வாழ்க்கையை காண்கின்ற பிள்ளைகளுக்கு அவர்களின் எதிர்கால வாழ்விற்கு நல்லதொரு பாதையைக் காண்பிக்க முடியும். சிந்திப்போம் கர்த்தரின் வார்த்தைக்கு கீழுப்படிவோம்.

# கிதியோனின் களம்

**நியாயாதிபதிகள் 6 ஆம் அதிகாரம்** - Bro. Neville -

மீதியானரின் கட்டுப்பாட்டிலிருந்து இஸ்ரவேலை காப்பாற்ற தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வீரனாக கிதியோன் காணப்பட்டான். இஸ்ரவேலருக்கு அக்காலம் இக்கட்டான காலமாயிருந்தது. ஏனெனில் துணிகரமாய் இஸ்ரவேலரின் தானியங்களை, உடைமைகளை மீதியானியர் கொள்ளையடித்தனர். ஆதலால், கிதியோன் மறைமுகமாக, பழச்சாறு பிழிந்தெடுக்கிற ஆலையிலே தன் தானியங்களை சுத்தப்படுத்தினான். அவன் மிகுந்த திறமைசாலியாக இருந்தான்,

ஆதலால் தான் கர்த்தருடைய தூதன் பராக்கிரமசாலியே! என்று அழைக்கிறார். அவன் திறமையுள்ளவனாக இருந்தாலும், தேவனைக்குறித்து அதிருப்தியான சிந்தையுள்ளவனாயும், விரக்தியடைந்தவனாயும் தன் கடமையை செய்து வந்தான்.

ஆதலால் தான் அவன் ஆ! என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா? என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான்.

வசனம் 36லிருந்து பார்க்கும் போது தனது வெற்றியை நிச்சயித்துக்கொள்ள மிக அபூர்வமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்களை தேவனிடத்தில் கேட்கிறான். தேவனும் அவன் கேட்ட விதமாகவே செயல்புரிந்தார். கிதியோனின் வாழ்வில் தேவசித்தம் நாடினது ஒரு ஆரம்பம் மட்டுமே. வரவர அவன் தேவனால் சோதிக்கப்பட்டே அவரால் பயன்படுத்தப்பட்டான். என் சித்தத்தை செயலாற்ற பெரிய பெரிய காரியங்களை கேட்டாயல்லவா? இதோ! பார் உனக்கும் ஒரு அவகாசத்தைத் தருகிறேன். கிதியோன் நன்றாகவே சோதிக்கப்பட்டான்.

நியாயாதிபதிகள் 7: 3-20 வரையிலான வசனங்களில் மீதியானரோடு யுத்தம் செய்ய 32 ஆயிரம் பேரில் 22 ஆயிரம் பேர் திருப்பி அனுப்பப்பட்டனர். மீந்த 10 ஆயிரம் பேரில் 9700ம் பேர் திருப்பி அனுப்பப்பட்டனர். எஞ்சியவர்கள் 300 பேர் மட்டுமே யுத்தத்திற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர். சக்திவாய்ந்த போராயுதங்களையோ அல்லது சாதாரண ஆயுதங்களையோ பாவிக்கவும் அனுமதியில்லை. கிதியோன் மிகவும் யோசிக்க வேண்டியதாயிருந்திருக்கும்.



நாம் இச்சம்பவத்தில் இருந்து கற்றுக்கொள்ள அநேக பாடங்கள்

இருக்கின்றன. நாம் தேவனால் சோதிக்கப்படும் போது எமது பேச்சுவார்த்தை, நடவடிக்கை, வாழ்வு ஆண்டவரை மையப்படுத்துகிறதா?

தேவன் செயல்படுத்தும் முறைகள் மனுஷர் பார்வையில் நகைப்பிற்கும், கேள்விக்குறிக்கும் இடமாகலாம். தேவனுடைய செயல்பாடுகளை அவர் அவரின் கொள்கையாக கொண்டுள்ளார். 300 பேரைக் கொண்டு ஒரு மாபெரும் சேனையை தோற்கடிப்பது நினைத்துக் கூட பார்க்க முடியாது. ஆனாலும் கிதியோனின் சேனை வென்றது.

ஆதலால், தேவ பணியில் ஈடுபடுபவர்கள் தேவசித்தம் நாடுவது மிக மிக அவசியமாயிருக்கிறது. நாங்களாகவே ஒரு உணர்வின் அடிப்படையிலோ, உற்சாகத்தினாலோ தேவனுடைய பணிக்கு செல்கிறோமா? தேவபணிக்கு எம்மை தேவன் எம்மை அழைத்திருந்தால் அதற்கான தேவ பெலத்தை அருளுவார். தேவன் எமக்கு எதை சொல்லுகிறாரோ அதையே நாம் செய்ய வேண்டும். பரிசுத்தாவியானவரின் பெலத்துடனும், அக்கறையுடனும் பணிபரியும் போது தேவன் எம்மில் பிரியப்படுவார்.



முதலாவது, நாம் தேவனுடைய சித்தத்தை அறிவதில் அதிக அக்கறைக்கொள்ளுதலும், நேரம் செலவிடுதலும் மிக மிக அவசியமாயிருக்கிறது. எமது சேவைக்கான, வாழ்க்கைக்கான ஆதார பூர்வமான தேவவார்த்தைகள் எமக்கு தேவன் அருளால் ஆவியானவரால் உறுதிப்படவேண்டும்.

அடுத்தபடியாக, தேவ சித்தமானது எமக்கு முடிவு எடுக்க முடியாத கஷ்டமான சூழ்நிலைகளிலும் சரியானதை செயலாற்ற தைரியம் ஏற்படும் அதற்கு பவுலின் ஊழிய வாழ்க்கையில் அவன் நல்லதொரு உதாரணமாய் இருக்கின்றான். பின்வரும் வேத வசனப்பகுதியைக் கவனியுங்கள்:

அப்போஸ்தலர் 21: 10 - 14 ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இந்த விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான். இவைகளை நாங்கள் கேட்டபொழுது, எருசலேமுக்குப் போக வேண்டாமென்று, நாங்களும் அவ்விடத்தாரும் அவனை வேண்டிக் கொண்டோம். அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்து போகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாய் இருக்கிறேன் என்றான். அவன் சம்மதியாத படியினாலே, கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது என்று அமர்ந்திருந்தோம்.

மூன்றாவதாக நமது பணியானது மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தைக்கொண்டு வருகிறதாய் இருக்க

வேண்டும். அப் 27:33-36ஐப்பாருங்கள்.

பொழுது விடிகையில் எல்லாரும் போஜனம் பண்ணும் படி பவுல் அவர்களுக்குத் தைரியஞ்சொல்லி: நீங்கள் இன்று பதினாலு நாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருக்கிறீர்கள். ஆகையால் போஜம் பண்ணும் படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும் உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது என்றான். இப்படிச் சொல்லி, அப்பத்தை எடுத்து, எல்லாருக்கு முன்பாகவும் தேவனை ஸ்தோத்திரித்து, அதைப் பிட்டுப் புசிக்கத் தொடங்கினான். அப்பொழுது எல்லாரும் திடமனப்பட்டுப் புசித்தார்கள்.

நான்காவதாக நான் பெறும் தேவ சித்தத்தில் தேவன் மட்டுமே மகிமைபடல் வேண்டும்.

**இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகல வித நற்கிரியையிலும் சீர் பொருந்தினவர்களாக்குவாராக அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக! ஆமென்.**
**எபிரேயர் 13: 21**

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

### ஞாயிற்றுக்கிழமை

முு.ப. 8.15 - ஞாயிறு பாடசாலை
மு.ப. 9.30 - ஆராதனை வேளை
பி.ப 1.30 - வாலிபர் கூட்டம்
பி.ப. 4.00 - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி)
பி.ப. 6.00 - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி)

### செவ்வாய்க்கிழமை

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

### புதன் கிழமை

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

### வெள்ளிக்கிழமை

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!



# சத்தியமாய் சாத்தியமா?

சபையின் சரித்திரத்தில் சபைத்தலைவர்க்காய் சாகசங்கள்

வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது போல வாழ்வது தற்கால உலகத்துக்கு பொருந்தாது என்பதே இன்றைய நவீன யுகத்தில் வாழும் நம்மில் பலரது குறிப்பாக இளைஞர்களது எண்ணமும் கருத்துமாகும். எபிரேயர் 11ல் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த விசுவாச வீரர்களின் பெயர்ப்பட்டியல் நமக்கு நினைவுறுத்துவது நாமும் அவர்களைப்போல வாழ வேண்டும் என்பதையே.

கிறிஸ்தவனாய் வாழ்வதில் எத்தனை பாடுகள் இருப்பினும் உண்மையான கிறிஸ்தவனாய் வாழ்வது சத்தியமாய் சாத்தியமா? அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் ஹட்சன் டெய்லர்.

## ஏமி கார்மைக்கல் அம்மையார்

ஏமியின் வாழ்க்கை இரட்சகருக்காக தன்னலமற்ற, அர்ப்பணிக்கப்பட்ட ஓர் வாழ்வாகும். இருட்டில் அகப்பட்டுள்ளவர்கள் கர்த்தரின் அன்பை அறியவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக வாழ்ந்தார். இவள் வட அயர்லாந்தில் 1867ஆம் ஆண்டு பிறந்தாள். இவளுடைய தகப்பன் இவள் 18 வயதாக இருக்கும்போது இறந்துவிட்டார். ஏழு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்திற்கு இவள் மூத்தவளாக இருந்தாள். இவளது தகப்பனாரின் இறப்பு, எதிர்காலத்தைப் பற்றியும், இவளது வாழ்க்கையில் கர்த்தரின் நோக்கத்தையும் குறித்து ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியது.

ஏமி மிஷனரியாக வருவதற்கு முன்பாகவே, கர்த்தர் அவள் செய்யப்போகும் வேளைக்கு அவளை ஆயத்தப்படுத்தினார். இவளுக்கு முதலாவது அறிகுறி, பனி நிறைந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் வந்தது. அன்றையதினம் அவள் ஞாயிறு ஆராதனையின் பின் குடும்பத்தோடு வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு வயதான பெண் சுமக்க முடியாத அளவு பெரிய பாரத்தை சுமந்துகொண்டு செல்வதை ஏமியும், அவளது சகோதரர்களும் கண்டார்கள்.

இவள் இவ்வாறு எழுதுகிறாள்: இவள் உள்ளான ரீதியில் உதவிசெய்யவேண்டும் என உணர்த்தப்பட்டாலும் அவள் தர்மசங்கடமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டாள். அதுயாதெனில், அவளைப்போல மரியாதைக்குரிய விசுவாசிகள் ஆலயம் முடிந்து வீடு திரும்பி கொண்டிருப்பதாகும். அவர்கள் இரண்டு ஆண்களும் ஏழு பெண்களுமாக இருந்தனர். மேலும், அவர்கள் உயர்வான கிறிஸ்தவர்களாக இருக்கவில்லை. அவர்கள் அந்த பெண்ணுக்கு உதவி செய்வதை வெறுத்தார்கள். இவர்கள் இந்த காரியத்தை செய்ய மறுத்தாலும் இவர்களது உள்ளான சிந்தனைகளோடும் வெளிச்சூழலோடும் போராடிக்கொண்டிருந்தார்கள்

ஏமி தொடர்ந்து நடந்து போகையில் 1 கொரி 3:12-14 வரையிலான வசனங்கள் அவளது செவியில் பேசுவது போல உணர்ந்தாள். ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல்

ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும் நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும் அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்.

அவள் திரும்பி யாரும் அங்கிருக்கிறார்களா? என பார்த்தபோது, ஒருவரையும் காணவில்லை. ஓடையின் நீர் சத்தமும், தன்னைக் கடந்து போகும் சக மக்களின் சத்தமுமாக இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்திற்கு முன்பாக ஏமி சமூக சேவையிலே ஈடுபாடு உடையவளாகக் காணப்பட்டாலும், கர்த்தர் மீண்டுமாக அவளை தன்னோடு ஒப்புரவாக அழைப்பது போன்று உணர்ந்தாள்.

கர்த்தரின் கரம்

1886ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் கார்மைக்கேலின் குடும்பம் கிலெஸ்கோ என்ற இடத்திற்கு ஒரு மாநாட்டில் கலந்துகொள்ள சென்றது. இந்த இடம், இங்கிலாந்தின் லேக் மாவட்டம் என்னும் இடத்தில் உள்ளது. இந்த மாநாட்டிலே ஏமி கர்த்தரின் வழிநடத்துதலை தனது வாழ்க்கையில் கண்டு கொண்டாள்.

இந்த மாநாட்டின் நோக்கம் பரிசுத்தம் அல்லது உயர்ந்த கிறிஸ்தவ ஜீவியம் என்பதைப் பற்றியதாகும். ஏமி இந்த மாநாட்டைப் பற்றிச் சொல்லும்போது இந்த மண்டபம் சோர்வான மந்தகதியான நபர்களினால் நிறைந்து இருந்ததாகக் குறிப்பிடுகிறாள். நான் இந்த மாநாட்டுக்கு வரும்போது அரை நம்பிக்கையுடனும், அரை பயத்துடனும் வந்தேன். இங்கே எனக்கு ஏதேனும் கிடைக்குமோ என்ற கேள்வியோடு வந்தேன். ஆனால், இந்த மாநாட்டின் தலைவர் இறுதி ஜெபத்திற்காக எழுந்து நின்றார். ஓ, ஆண்டவரே, உம்முடைய இருதயம் நாங்கள் வீழ்ந்து போவதில் இருந்து மீட்கவல்லது என்று நாங்கள் அறிவோம் என ஜெபம் செய்தார். அந்த வசனங்கள் ஏமியின் வாழ்க்கையைத் தொட்டன. இந்தச் சந்தர்ப்பத்தில் இருந்து, தன்னுடைய வாழ்க்கையை இயேசுகிறிஸ்துவுக்காக வாழ்வதைத் தவிர வேறு முக்கியத்துவம் இல்லை என புரிந்துகொண்டாள். தன்னிடம் உள்ள சகலத்தையும் தேவன் ஒப்படைக்கும்படியாக கேட்கிறார் என புரிந்து கொண்டாள். உலக காரியங்கள் மாத்திரம் அல்லாமல், சகல பழக்கங்களையும், சகல அலங்காரங்களையும் ஒப்படைத்தாள்.

1895ஆம் ஆண்டு, இங்கிலாந்து திருச்சபையின் சொனா மிஷனரி ஸ்தாபனம் என்ற அமைப்பினால் இந்தியாவின் டோனாவூர் என்ற பிரதேசத்திற்கு செல்லும்படியாக அனுப்பப்பட்டாள். இங்கு இவள் ஏறக்குறைய 56 வருடங்கள் கர்த்தருக்கு அர்ப்பணிப்புள்ள பணிவிடைக்காரியாக செயற்பட்டாள். அவளது ஊழியத்தின் பெரும்பகுதி விபசாரிகளாக இருக்க ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை விடுவிக்கும் பணியாக இருந்தது.

இவளுடைய சிந்தனையில் அந்த வயதான பெண் பொதியினை தூக்கிச்செல்லும் காட்சி படமாக வந்துகொண்டிருந்தது. இந்த உலகிலே அன்புக்காக ஏங்குபவர்களுக்கு அன்பு காட்ட கர்த்தர் தன்னிடத்தில் அன்பு கூர்ந்தார் என உணர்ந்தாள். இங்கு அன்பின் வெளிப்பாடாக டோனாவூர் ஐக்கியம் என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்தாள். இவ்விடத்தில் உள்ள ஆலயம் விபசார பெண்களுக்கு

பாதுகாப்பு அரணாகவும், உறைவிடமாகவும் மாறியது.

கிட்டத்தட்ட 1000 பெண்பிள்ளைகளுக்கு மேலாக இந்த ஊழியத்தின் மூலம் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு ஏமி அம்மாவாக காணப்பட்டாள். உலகம் பயங்கரமானதாகவும், அழுத்தம் நிறைந்ததாகவும் காணப்பட்டது. ஆனாலும், ஏமி கர்த்தரின் பொருத்தனையை எல்லா விஷயங்களிலும் நடைமுறைப்படுத்த மறக்கவில்லை. அநேக நேரங்களில் இயேசு கிறிஸ்து அன்று ஒலிவமரத்திற்கு அடியிற் முழங்காற்படியிட்டிருக்கிறதைப் போன்று தனியாக முழங்காற்படியிட்டு இருப்பதை எனது சிந்தனைக் கண்களால் கண்டிருக்கிறேன். அவரைக் குறித்த கரிசனையுடைய ஒருவர் இருப்பாரேயானால், அவர் சிறுபிள்ளைகள் மீது காட்டிய மனதுருக்கத்தில் நாமும் பங்கடையும் பொருட்டு இயேசுவிடம் சென்று முழங்காற் படியிடுவதே அவர் செய்ய வேண்டியதாகும்.

ஏமி கிட்டத்தட்ட 35 புத்தகங்களை எழுதியுள்ளார். இவர் சிறுமியாக இருக்கும்போதே எழுத்துத்திறமையை வெளிப்படுத்தினார். ஆனால், 1931 ஆம் ஆண்டு, நடந்த விபத்தின் காரணமாக இவர் டோனாவூர் ஐக்கிய ஸ்தாபனத்தின் வளாகத்திற்குள் அடைபட்டு கிடக்க வேண்டியதாயிற்று.

கீழ்ப்படிதல், முழுமையான அர்ப்பணிப்பு, தன்னலமற்ற வாழ்க்கை போன்ற முன்னுதாரணங்களை ஏமி தனது வாழ்க்கையின் மூலம் விட்டுவிட்டுச் சென்றாள். இயேசுகிறிஸ்துவுக்காக வாழுதல் என்ற காரியம் மறைந்து போகும் இக்காலகட்டத்தில் ஏமியின் வாழ்க்கை ஜொலித்துக்கொண்டிருக்கும் ஒரு வாழ்வாகும்.


கர்த்தர் ஏமியை பயன்படுத்தியதுபோல உங்களையும் பயன்படுத்தலாம். பயன்படுத்தாமல் விடலாம். ஆனால், அவர் உங்களுடைய வாழ்க்கையில் ஒரு திட்டத்தை வைத்துள்ளார்.

உங்களது வாழ்க்கையில் அவரது பரிபூரண திட்டத்தை வெளிப்படுத்த கேளுங்கள். கர்த்தரின் பிரதிபலன் மனிதர்களின் மதிப்பீடுகளையும், பணரீதியான மதிப்பீடுகளையும் அடிப்படையாகக் கொண்டவை அல்ல. மாறாக, அவை கர்த்தரோடு ஒப்புரவாகும் நபர்களுக்கும், இயேசுவுக்காக தங்களை அர்ப்பணிக்கும் நபர்களுக்கும் வெளிப்படுத்தப்படும் காரியங்களாகும். கீழ்ப்படிவாயோ?

தொடரும்........

# உங்களுக்கு தெரியுமா?





மனித சரித்திரத்தில் அதிசிரேஷ்ட அறிவுபூர்வமான செயல்பாடாக கருதப்படும் பொதுத்தொடர்பு தத்துவத்தை (சார்புக்கொள்கை) முன்வைத்தவர் அல்பெட் ஐன்ஸ்டைன் ஆவார். அவர் யூத இனத்தைச் சேர்ந்தவர். அவர் கிறிஸ்தவரல்லாதவராயினும் அகிலத்தில் நிலைத்திருக்கிற ஒழுங்கு விதிகளையும் ஒழுங்கமைப்பின் நேர்த்திகளையும் அவதானித்து, அதன் அடிப்படையில் படைப்பாளர் ஒருவர் இருக்க வேண்டும் என்று விசுவாசித்தார்

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ..................................................

**முகவரி:** ..................................................

..................................................

..................................................

**ஒப்பம்:** ..................................................

# ஜீவ ஒளி

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும்
ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால்
உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி
அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:


Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901
www.christianfellowshipcentre.com